மின்னிதழ் E-paper

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

08.07.2020 புதன்கிழமை


## விமானப்படை சிப்பாய்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் கைது

முல்லைத்தீவு, ஜூலை 08

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத்தள படையினர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கேப்பாபிலவு விமானப்படைத் தளத்தைச் சேர்ந்த விமானப்படையினர் இருவர் பாதுகாப்புக் கடமைகள் நிமித்தம் சூரிபுரம் பகுதிக்குச் சென்றபோது அங்கு நின்ற இளைஞர்களுக்கும் விமானப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட

02

# ஜனாதிபதி செயலணிகளின் உருவாக்கம் ராணுவ மயமாக்கலை நினைவூட்டுகிறது

## யஸ்மின் சூக்கா சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 08

ஜனாதிபதி செயலணிகளின் உருவாக்கம் ‘செயலணி’ என்ற பெயர் இராணுவ மயமாக்கலை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

02

## நாவலப்பிட்டியில் வெடிபொருள் மீட்பு



கொழும்பு, ஜூலை 08

நாவலப்பிட்டி, கொத்மலை ஓயாவின் கற்குகை ஒன்றில் இருந்து 99 டெட்டனேட்டர்கள் மற்றும் 8 குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெடிப்பொருட்கள் நேற்று மாலை நாவலப்பிட்டி விசேட அதிரடிப்

02

## மாகாண சபைத் தேர்தலை ரணிலே தடுத்து நிறுத்தினார்

### மைத்திரிபால குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 08

கடந்த காலத்தில் மாகாண சபைத் தேர்தலை ரணில் விக்கிரமசிங்கவே தடுத்து நிறுத்தினார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவைப் பகுதியில்

02

## கஜேந்திரகுமாரின் அணிக்கு சவால் விடுத்துள்ள அங்கஜன்

கொழும்பு, ஜூலை 08

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தனது தேர்தல் பிரசாரப் பணிக்காக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் உறுதிப்படுத்தினால் தான் தேர்தலில் இருந்து விலகுவதற்கு தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்

02

## ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான பிடியாணைக்கு இடைக்கால தடை

கொழும்பு, ஜூலை 08

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட ஆறு பேரை கைது செய்வதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக் காலத் தடை உத்தரவு

02

## சமுர்த்தி அலுவலரின் வீட்டின் மீது தாக்குதல்!



யாழ்ப்பாணம், ஜூலை 08

கோண்டாவில் கிழக்கு ஞானவைரவர் வீதியில் உள்ள, சமுர்த்தி உத்தியோகத்தரின் வீட்டின் மீது, நேற்றிரவு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் சமுர்த்தி

02

## சிவாஜிலிங்கத்தை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பு

### நவாலிப் படுகொலை நினைவேந்தலை தடுக்க

யாழ்ப்பாணம், ஜூலை 08

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்கத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் பொதுமக்களுக்கு தடை விதிக்கக் கோரி மானிப்பாய் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றில் இன்று முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்புக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளை வியாழக்கிழமை நினைவு கூரப்படவுள்ளது.

இந்த நிலையிலேயே நினைவேந்தல் நிகழ்வை ஆர்ப்பாட்டமாகச் சித்தரித்து இந்தத் தடை உத்தரவை மானிப்பாய் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் கோரியுள்ளனர்.

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,081 | 04 | 115 | 35 | 1,955 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

### விமானப்படை...
முரண்பாடு கைகலப்பாக மாறியதை அடுத்து விமானப்படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து காயமடைந்த 35 வயதான விமானப்படைச் சிப்பாய் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளைஞர்கள் இருவரைக் கைது செய்துள்ளதாகவும் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

### நாவலப்பிட்டிய...
படையினரால் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாவலப்பிட்டி, கொத்மலை ஓயாவிற்கு நீராட சென்றவர்களால் இந்த வெடிபொருட்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து நாவலப்பிட்டி விசேட அதிரடிப் படையினருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய அவை மீட்கப்பட்டதாக தெரிவித்துள்ள நாவலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### கஜேந்திரகுமாரின்...
கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு குறித்த விடயத்தை நிரூபிக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவறினால் தேர்தலில் இருந்து விலகுவதற்குத் தயாராக இருக்கின்றனரா? என்றும் அவர் சவால் விடுத்துள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அங்கஜன் இராமநாதன் இவ்வாறு சவால் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடக சந்திப்பொன்றில் அங்கஜன் இராமநாதன் கோட்டாபாயவின் ஏஜென்ட் என்றும் அவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும் என்றும் ஒரு கருத்தினை தெரிவித்தார்.

அது மட்டும் அல்லாது அந்தக் கட்சியின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளரும் சட்டத்தரணியுமான சுகாஸ் அங்கஜன் இராமநாதனின் தேர்தல் பிரசாரப் பணிக்காக ராணுவத்தினரும் பாதுகாப்புத் தரப்பினரும் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

இந்தக் கருத்தை நான் முற்றாக மறுக்கின்றேன்.எனது தேர்தல் பிரசாரப் பணிக்காகப் பாதுகாப்புத் தரப்பில் ஒருவரேனும் பயன்படுத்தப்பட்டால் அதனை ஆதாரத்துடன் நிரூபிக்கவேண்டும்.அவ்வாறு அவர்கள் ஆதாரத்துடன் நிரூபித்தால் நான் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இருந்து முழுமையாக விலகுகின்றேன்.

இதேபோன்று எனது பிரசாரப் பணிகளுக்காக பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதை அவர்களால் நிரூபிக்க முடியாவிட்டால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இந்தத் தேர்தலில் இருந்து விலகிக் கொள்வார்களா?என்பதையும் அவர்கள் பகிரங்கமாகத் தெரிவித்து கொள்ள வேண்டும்.

நான் அபிவிருத்திகளையும் அரசியல் தீர்வையும் முன்னெடுப்பதற்காகவே தேசிய கட்சியுடன் இணைந்து பயணிக்கின்றேன்-என்றார்.

### ஜனாதிபதி...
இவை அதிகாரத்தை ஒன்றுகுவிப்பதுடன் ஏற்கனவே அதிகளவான அதிகாரத்தை அனுபவித்துவரும் ஜனாதிபதியின் முக்கிய இராணுவ நண்பர்களுக்கும் மேலும் தடையற்ற அதிகாரத்தை வழங்குகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தின் வழமையான கொள்கைகளையும் கடந்து, அதிகாரம் மிக்க இராணுவ மயப்படுத்தப்பட்ட செயலணிகள் ஊடாக தன்னாட்சி அதிகாரம் உடையவர் போன்று இலங்கையின் ஜனாதிபதி நாட்டை எவ்வாறு ஆட்சி செய்கின்றார் என்பதை வெளிப்படுத்தும் விதமாக ஒரு விளக்கப்படமொன்றைச் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் வெளியிட்டிருக்கிறது.

இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த அமைப்புக்கள் சரியான முறையில் மக்களால் தெரிவு செய்யப்படாதவை என்பதுடன், இவை சிவில் சேவையின் முழுமையான ஒத்துழைப்பு தேவைப்படும் ஜனாதிபதியின் நேரடியான பொறுப்பில் இருப்பதுடன், அவை நாடாளுமன்றத்தின் வழமையான ஆய்வுக்கும் மேற்பார்வைக்கும் உட்படுவதில்லை.

செயலாளர்கள் மாத்திரமன்றி அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவைக் குழுக்கள் இந்த மக்களால் தெரிவு செய்யப்படாத அமைப்புக்களுக்குக் கீழ்ப்படிந்து பணியாற்ற வேண்டியிருக்கும். அவை அவ்வாறு செயற்படாவிட்டால் தமது தொழில்களுக்குக் குறிப்பிட்டுக்கூற முடியாத பின்விளைவுகளை ஏற்படுத்தும் விதமாக ஜனாதிபதிக்கு அவை குறித்து அறிவிக்கப்படும்.

அரசியல் யாப்பில் திருத்தம் செய்யக்கூடியதாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஜனாதிபதி பெற்றுக்கொள்வார் என்று நம்பப்படும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்கள் காரணமாக இது மேலும் கவலையடையச் செய்கிறது- என்றுள்ளது.

மேலும் இந்தச் செயலணிகள் ஒரு சமாந்தரமான அரசை உருவாக்கும் ஆபத்தைக் கொண்டிருப்பதுடன் பெரும்பாலும் ஜனாதிபதி, அவரது குடும்பம் மற்றும் முன்னாள் இராணுவச் சகபாடிகளுக்கு ஆதரவு வலையமைப்புக்கள் மற்றும் பொதுச்சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான இணையற்ற அதிகாரத்தை வழங்குகிறது என்று யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

செயலணிகளின் உருவாக்கமானது சட்டரீதியாகக் கேள்வி எழுப்பக்கூடிய தாகவும் நிர்வாக ரீதியாக இருண்ட தாகவும் உள்ளதாக இலங்கையிலுள்ள வழக்கறிஞர்கள் கூறியிருப்பதாக தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கும் இந்த அமைப்பு, செயலணிகளுக்குக் கால எல்லை இல்லை என்பதுடன் அதற்கான வரைவு ஒழுங்கற்றதாகவும், 'செயலணி' என்ற பெயர் இராணுவ மயமாக்கலை நினைவூட்டுவதாக அமைந்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது.

### சமுர்த்தி...
உத்தியோகத்தரின் வீட்டின் யன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளன. வீட்டில் இருந்த தளபாடங்களும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது,

# கரும்புலிகள் தினத்தில் தாக்குதலுக்குத் திட்டம்!



கொழும்பு, ஜூலை 08

கரும்புலிகள் தினத்தில் தாக்குதலை மேற்கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட குண்டே இயக்கச்சியில் வெடித்தது எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர் என்று "ஐலன்ட்" செய்தி வெளியிட்டுள்ளது.

இயக்கச்சியில் முன்கூட்டியே வெடித்த குண்டை முல்லைத்தீவுக்குக் கொண்டு சென்று வெடிக்கவைப்பதற்கான திட்டம் காணப்பட்டது எனவும் "ஐலன்ட்" செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முன்னாள் போராளிகளும் கிளிநொச்சியைச் சேர்ந்த பல இளைஞர்களும் கரும்புலிகள் தினத்தைக் கடைப்பிடிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டனர் என விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை சம்பவத்தைத் தொடர்ந்து குண்டு தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட முன்னாள் பேராளியின் மனைவியையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். அவரும் முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளி. குண்டை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் புலனாய்வுப் பிரிவின் போராளி. அவரது பெயர் மேனன்.குண்டு வெடிப்பில் காயமடைந்த மேனன் முதலில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரது நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேனனின் வீட்டை சோதனையிட்ட வேளை இரு குண்டுகளையும் வெடிக்கவைக்கும் கருவிகளையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்தனர். முன்கூட்டியே குண்டு வெடித்ததன் காரணமாக விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களால் கரும்புலிகள் தினத்தில் தங்கள் திட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை.

கைதுசெய்யப்பட்ட முன்னாள் போராளி இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவர் எனவும், விடுதலையான பின்னர் புதிதாக உருவாக்கப்பட்ட அரசியல் கட்சியில் இணைந்தவர் எனவும் தெரியவந்துள்ளது என விசாரணையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைகழக மாணவர்கள் கரும்புலிகள் தினத்தைக் கடைப்பிடித்தமை குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன என குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் - என்றுள்ளது.

### மாகாண சபைத்...
இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது சுமார் மூன்று ஆண்டுகளாக மாகாண சபை இல்லை.

### ரவி...
பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான ஏ.எச்.எம் நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் சோஹித ராஜகருணா ஆகியோரின் முன்னிலையில் நேற்று ரவி கருணாநாயக்க தாக்கல் செய்த ரிட் மனு விசாரணைக்கு வந்தபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகள் முடிவடையும் வரையில் இவ்வாறு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின் அடிப்படையில் மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு எவ்வித இடையூறும் இல்லை என மூவரடங்கிய நீதிபதிகள் குழுவின் தலைவர் நீதிபதி நவாஸ் தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு மத்திய வங்கி முறிகள் ஏலங்களில் 52 பில்லியனுக்கும் அதிகமான அரசு நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் முறிகள் மோசடி தொடர்பில் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனது அரசில் இருந்த பிரதமரே பல்வேறு நாடாளுமன்றக் குழுக்களை நியமித்து மாகாண சபைத் தேர்தலை இல்லாது செய்துவிட்டார்.

இந்த நிலையிலேயே, இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தற்போதைய ஜனாதிபதிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுத் தருமாறு நாம் கோருகின்றோம். அரசியல்வாதிகளின் அரசியல் கலாசாரம் சிதைவடைந்துள்ளது.

அரசியல்வாதிகள் பலர் ஊழல் மோசடிகளுக்கு அடிமையாகியுள்ள நிலையில் மக்களின் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளார்கள். இவை அரசியல் குழப்பத்தின் ஒரு பகுதியாகும். அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை எடுத்துக் கொண்டால், இவற்றை தீர்ப்பதற்கு தற்போதைய அரசிப் பலப்படுத்த வேண்டும்.

எதிர்க் கட்சியினருக்கு நாடாளுமன்றப் பலம் சென்றால் நாடு பாரிய பிரச்சினைக்கு தள்ளப்படும். அரசு ஒரு கட்சியாகவும், ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் இருந்தால் நாடு அழிவடைகின்றது.

எனக்கு அதுவே நடந்தது.நான் பொலனறுவை என்பதால் என்னை எப்படியாவது மடித்து எடுக்க முடியும் என நினைத்துக் கொண்டு, அவரின் கட்சியினருடன் கலந்துரையாடி பொது வேட்பாளராக என்னைத் தெரிவு செய்தார். ஆனால் அவர் கூறிய விடயங்களை நான் கூறவில்லை.

இதனால் அவரது தந்திரம் நிறைவேறவில்லை.இதனால் தொடர்ந்தும் மோதல் ஏற்பட்டது- என்றார்.

ஈழநாடு
Eelanadu
08.07.2020 புதன்கிழமை

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**gmail:- eelanaduweekly@gmail.com**

**தொலைபேசி : 021 492 7805**

# குமாரின் பிரச்சினை?

2001 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது, அதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் ஒரு பங்காளியாக இருந்தது. அப்போது கூட்டமைப்பு உதய சூரியன் சின்னத்தின் கீழ் இருந்தது. அதன் மூலம்தான் கஜேந்திரகுமார் நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்தார். பின்னர் ஆனந்தசங்கரிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளின் காரணமாக, பல வருடங்களாகக் கிடப்பில் கிடந்த, தமிழரசு கட்சிக்கு புலிகள் உயிர்கொடுத்தனர். இதனை இப்போது சம்பந்தன் மறுக்கக்கூடும் ஆனால் மாவைசேனாதிராசா ஒரு போதும் மறுக்கமாட்டார். 2004 இலிருந்தே வீடு கூட்டமைப்பின் சின்னமானது. 2004இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு மீண்டும் குமார் நாடாளுமன்றம் சென்றிருந்தார். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் குமாரிற்கு சின்னங்கள் ஒரு பிரச்னையாக இருந்திருக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர்தான் சின்னங்கள் பிரச்னையாகின. 2010இல் நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியதைத் தொடர்ந்து குமாரிற்கும் சம்பந்தனுக்கும் இடையில் முறுகல் ஆரம்பித்தது. இதனைத் தொடர்ந்து குமார் தனது பாட்டனாரின் கட்சியான, தமிழ் காங்கிரஸில் தனிப் பயணத்தை ஆரம்பித்தார். தான் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியதற்கு கொள்கைதான் காரணம் என்பார் குமார். ஆனால், கூட்டமைப்பினரோ - ஆசன ஒதுக்கீடுதான் காரணம் என்பர். குமார் கேட்ட ஆசனங்களை சம்பந்தன் தரமறுத்ததன் காரணமாகவே, குமார் வெளியேறினார் என்பதுதான் கூட்டமைப்பின் தலைவர்கள் சொல்லும் விளக்கம். காரணம் எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும்.

தான் மட்டுமே சரியானவர் என்னும் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு, 2010 இலிருந்து குமார் தனது பயணத்தை தொடர்ந்து வருகின்றார். ஆனாலும் அவரால் எதிர்பார்த்தவாறு மக்கள் மத்தியில் ஆதரவைப் பெற முடியவில்லை. இப்போதும் கூட, தான் அல்லது தங்கள் கட்சி மட்டும்தான் சரியானவர்கள் என்னும் பிரசாரத்தை அவர் கைவிடவில்லை. தாங்கள் மட்டுமே ஒற்றையாட்சியை எதிர்த்து வருகின்றனர் எனவும் ஏனையவர்கள் அனைவரும் ஒற்றையாட்சியை ஆதரிப்பதாகவும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்திருக்கின்றார். அவரின் இந்த அணுகுமுறையே அவரை மற்றவர்களிலிருந்தும், மற்றவர்களிலிருந்து அவரையும் அதிகம் விலக்கிவைத்திருக்கின்றது. ஆனால், தமிழ் காங்கிரஸ் கட்சியின் கொள்கை என்ன - அது ஒற்றையாட்சிக்குட்பட்டதுதானே - என்று சித்தார்த்தன் எழுப்பிய கேள்விக்கு அவர் இன்று வரை பதிலளிக்கவில்லை. பொதுவாக அரசியலில் தூய்மை வாதங்கள் பயனற்றவை. ஏனெனில் அரசியல் நெளிவு சுழிவுகளின் கலை. இன்று, விக்னேஸ்வரனும் குமாரும் ஓரணியில் இருந்திருந்தால், கூட்டமைப்பின் ஏகபோகம் பெருமளவிற்கு தகர்ந்து போயிருக்கும். ஒரு வகையில் கூட்டமைப்பின் ஏகபோகம் தொடர்வதற்கு குமார் பொன்னம்பலத்தின் அரசியல் அணுகுமுறையும் ஒரு முக்கிய காரணம்.

# வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்னை கிடையாதாம்

## *ராஜபக்ஷ தரப்புக்கு ஒத்தூதுகிறார் யாப்பா*

*கொழும்பு, ஜூலை 08*

"வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு அரசியலமைப்புசார் பிரச்னைகள் ஏதும் கிடையாது. பொருளாதார ரீதியான பிரச்னைகள் மாத்திரமே உள்ளன. அதிகார பகிர்வு, சமஷ்டி ஆகிய விடயங்களை குறிப்பிட்டுக் கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் அரசியலில் செல்வாக்கு செலுத்துகிறார்கள்.

இனவாதத்தை ஆயுதமாக கொண்டு பொதுஜன பெரமுன ஆட்சியை கைப்பற்றவில்லை. என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சுபீட்சமான மற்றும் பாதுகாப்பான நாட்டை உருவாக்குவதாக ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றியுள்ளார். போதைப்பொருள் வியாபாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொலிஸார் தொடர்பான பல தகவல்கள் தற்போது அம்பலமாகியுள்ளன. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கொள்கைத் திட்டங்களை செயற்படுத்தும் பலமான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மாத்திரமே 69 இலட்ச மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் ஆதரவு இல்லாமல் பெரும்பான்மை அரசாங்கத்தை அமைக்க முடியாது என்று குறிப்பிடுவது தவறு. இதை ஜனாதிபதி தேர்தலில் நிரூபித்துள்ளோம். ஒரு கட்சி பாராளுமன்றத்தில் தனித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பெற்று அரசாங்கத்தை அமைக்க முடியாது என்பதையும் இம்முறை மாற்றியமைப்போம்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு அரசியலமைப்பு சார் பிரச்னைகள் ஏதும் கிடையாது. அபிவிருத்தி சார்பான பிரச்னைகளே காணப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் துரிதமாக அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அக்காலக்கட்டத்தில் அப்போதைய அரசாங்கத்திற்கு வடக்கு, கிழக்கில் அரசியல் ரீதியான ஆதரவு பெரும்பாலும் கிடையாது. அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மாறாக மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கே முக்கியத்தும் வழங்கப்பட்டது - என்றார்.




## 'மை பஸ் - எஸ்.எல்.' செயலி அறிமுகம் செய்யப்பட்டது

பயணிகள் போக்குவரத்து சேவைகளின் வசதிக்காக உருவாக்கப்பட்ட மை பஸ் - எஸ். எல் தொலைபேசி செயலி பயன்பாடு நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது.

பயணிகள் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் ஆதரவின் பேரில் நாரஹேன்பிட்டியில் உள்ள தேசிய போக்குவரத்து ஆணையகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் குறித்த செயலியின் பயன்பாடானது அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

MyBus-SL என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த செயலி மூலம் பஸ் கால அட்டவணைகள், பஸ்களின் தரிப்பிடம், பயணத்தின் ஆரம்பம் முதல் அது நிறைவடையும் வரை பஸ் கட்டணம், முறைப்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்ளை இணையத்தளம் மூடாக அறிந்து கொள்ள முடியும்.

## வாள், கோடரியுடன் எழுவர் இராணுவத்திடம் சிக்கினர்

### நேற்றுநள்ளிரவு யாழில் சம்பவம்

*யாழ்ப்பாணம், ஜூலை 08*

வாள், கோடரிகளுடன் நள்ளிரவில் நடமாடிய ஏழு பேரை இராணுவத்தினர் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - தென்மராட்சி - வரணியிலேயே இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.



வரணி பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் கடந்த நள்ளிரவு ஐந்து மோட்டார் சைக்கிள்களில் பயணித்த ஏழு பேரை வழிமறித்து சோதனைக்கு உட்படுத்தினர்.

அவர்களிடம் வாள்கள், கோடரி, கொட்டன் தடிகள் என்பன காணப்பட்ட நிலையில் அவர்களை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருக்கின்றனர்.

இன்று அவர்கள் ஏழு பேர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# உதிரியாகப் பிரிந்து நின்றால் பிரதிநிதித்துவ பலம் சிதையும்

## சீ.வீ.கே.சிவஞானம் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 08

உதிரியாக பிரிந்து நின்றால் பிரதிநிதித்துவப் பலம் சிதையும் என வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வலிகாமம் கிழக்கில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2013ஆம் ஆண்டின் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நான்கு கட்சிகள் கூட்டமைப்பாக பெரும் வெற்றி கண்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆனால் மாகாண சபையின் ஆட்சி காலம் முடியும்போது ஈ.பி.ஆர்.எல்.எவ்கட்சி முழுமையாக கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. மேலும் நீதியரசர் விக்னேஸ்வரன், அனந்தி சசிதரன், ஐங்கரநேசன் போன்றோர் தனிக்கட்சி ஆரம்பித்து கூட்டமைப்புக்கு எதிரான நிலையில் உள்ளனர். ரெலோ அமைப்பும் இரண்டாக பிரிந்து ஒரு பிரிவினர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டமைப்புடன் இணைந்து கொள்ள ரெலோ தலைமையினர் கூட்டமைப்பு டன் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறு பிரிந்து நின்று உதிரிகளாக தேர்தலில் போட்டியிடுவதால் எமது பிரநிதித்துவ பலம் சிதைவடையவே செய்யும்.

குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைக்கக்கூடிய தேசியப்பட்டியல் ஆசனம் தென் பகுதிக்கு செல்லக் கூடிய அபாயம் தெளிவானது. மேலும் வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் கிடைக்க வேண்டிய நிதி ஒதுக்கீடுகளும் பறிபோகும்.

ஆகவே எமது மக்கள் சிரமம் பாராது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழுமையாக வாக்களிப்பதன் மூலம் அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாக தெரிவு செய்யப்படுது மட்டுமன்றி தேசியப்பட்டியலில் இரண்டு பேருக்கு கூடிய உறுப்பினர்களை தெரிவு செய்யக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

மேலும் இந்த தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவரே யாழ்ப்பாண மாவட்ட முதன்மை வேட்பாளர். எனவே கட்சித் தலைவர் என்ற வகையில் அவர் வெற்றி பெறவேண்டியது அரசியல் ரீதியாக அவசியமானது.

எனவே நீங்கள் தேர்தலில் வாக்களிப்பின்போது வாக்குச் சீட்டில் மூன்றாவதாக இருக்கக் கூடிய வீட்டுச் சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டு கட்சிக்கான கூடிய ஆசனங்களை உறுதி செய்துகொண்டு மாவை சேனாதிராசாவின் விருப்பு வாக்கு இலக்கம் எட்டுக்கு மேலே புள்ளடியிட்டு அவரை அமோக வெற்றியடையச் செய்யும் அதே நேரம் உங்களுக்கு இருக்கும் ஏனைய இரண்டு விருப்புவாக்குகளையும் நீங்கள் விரும்பும் ஏனையவர்களுக்கு வழங்கலாம்-என்றார்.

இவ் மக்கள் சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராசா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொருளாளர் பொ.கனகசபாபதி,வலிகாமம் வடக்கு பிரதேசபை தவிசாளர் எஸ்.சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கருணாவுக்கு சவால்விடும் சிவாஜி

விடுதலைப் புலிகளின் மேடையில் புலிகளை ஆதரித்துத் தான் பேசிய ஆதாரங்கள், எந்தக் காணொலிகள் இருந்தாலும் அதனை வெளியிடுமாறு கருணாவுக்கு சவால் விடுப்பதாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தச் சவாலை விடுத்தார்.

“செல்வம் அடைக்கலநாதனும் சிவாஜிலிங்கமும் விடுதலைப்புலிகளின் மேடையில் அவர்களுக்கு ஆதரவாகப் பேசிய காணொலிகளும் தன்னிடம் இருப்பதாகவும் அந்தக் காணொலிகளை வெளியிட்டால் இவர்களின் நிலை அதோகதிதான் எனக் கருணா கூறியிருந்தார்.

அவ்வாறு பேசியிருந்தால் நாம் அவற்றினை ஏற்றுக்கொள்வோம். உண்மையை கூறுவதற்கு தான் ஒருபோதும் பயப்படப் போவதில்லை. மக்களின் நலனுக்காகவும் அவர்களின் விடுதலைக்காகவும் எந்த நேரத்திலும் சாவினை தழுவிக்கொள்ள தயாராக இருக்கிறேன்” - என்றார் சிவாஜிலிங்கம்.

# தமிழ்க் கூட்டமைப்புடன் ஈரோஸ் இணையும் சூழல் இருக்கவில்லை

## அதன் தலைவர் அருளப்பு இராசநாயகம் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 08

ஈரோஸ் அமைப்பு கலைக்கப்பட்டு விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைக்கப்பட்டமையால் வன்னியில் பாலகுமார் இருந்த போதும் கூட்டமைப்புக்குள் இணைந்து கொள்ளக்கூடிய சூழல் இருக்கவில்லையென அந்த அமைப்பின் தலைவர் அருளப்பு இராசநாயகம் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது அது தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வை கொண்டுவரும் என நம்பியிருந்தோம். ஆனால் அவ்வாறு ஏதும் நடக்கவில்லை.

தற்போது மூன்று தரப்புக்களாக தமிழ்த் தரப்புக்கள் பிரிந்து நிற்கின்றன. இவ்வாறு பிரிந்து நிற்பதால் தமிழ் மக்களுக்கு ஏதும் கிட்டப்போவதில்லை.

அனைத்து தரப்புக்களையும் இணைந்து தமிழ் மக்களுக்கு தீர்வை பெற்றுத்தரவே ஈழவர் ஜனநாயக முன்னணி தேர்தல் களத்தில் குதித்துள்ளது.

இதனிடையே பிரிந்து அரசியலில் ஈடுபடுவது மக்களது கோரிக்கைகளை பலவீனப்படுத்தும். அரசு திட்டமிட்டு இத்தகைய பிளவுகளை தோற்றுவிக்கிறது.

கடந்த ஆட்சிக்கு முண்டு கொடுத்து கூட்டமைப்பு அரசியல் தீர்வை தரப்போவதாக தெரிவித்தபோதும் ஏதும் நடக்கவில்லை.

மாறி மாறி ஆட்சியிலிருக்கும் தெற்கு தரப்புக்கள் தமிழர்களுக்கு தீர்வை தரக்கூடாதென்பதில் ஒற்றுமையாக உள்ளன-என்றார்.

# தபால் மூல வாக்குச் சீட்டுக்கள் மூன்று தினங்களுக்குள் பகிர்வு

கொழும்பு, ஜூலை 08

தபால் மூலம் வாக்குகளை அளிப்பதற்கான வாக்குச் சீட்டுக்கள் எதிர்வரும் மூன்று தினங்களுக்குள் நாடு முழுவதும் உரிய அத்தாட்சிட்சிப்படுத்தலுடன் பகிர்ந்தளிக்கப்பட்டு விடும் என அஞ்சல் திணைக்களத்தின் ஆணையாளர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு, எதிர்வரும் 13ஆம், 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இந்தத் தினங்களில் வாக்களிக்க முடியாத அரச ஊழியர்கள், எதிர்வரும் ஜூலை மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் அந்தந்த மாவட்டச் செயலகங்களில் தபால்மூல வாக்களிப்பில் ஈடுபட முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை முதல் எதிர்வரும் மூன்று தினங்களுக்குள் தபால்மூலம் வாக்களிக்க விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் வாக்குச் சீட்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுவிடும் என அஞ்சல் திணைக்களத்தின் ஆணையாளர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்துள்ளதார்.

உரிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட அத்தாட்சி அதிகாரி ஊடாக வாக்குச் சீட்டுகள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி முழுமையாக நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகத்தின் பணிப்பாளர் ரஞ்சனி லியனகே தெரிவிவித்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.



செய்திகள்

# ‘மொட்டு’ சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டாம்

## தமிழ் மக்களைக் கோருகிறார் கருணா



மட்டக்களப்பு, ஜூலை 08

“அம்பாறை தமிழர்கள் “மொட்டு“ சின்னத்திற்கு வாக்களித்தால், அது முஸ்லிம் ஒருவரை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க ஏதுவாக அமையும். எனவே தமிழ் மக்கள் “மொட்டு“ சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டாம்.”

- இப்படித் தமிழ் மக்களைக் கோரியுள்ளார் கருணா என்று அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் அவர் நேற்றுமுன்தினம் கல்முனையில் பரப்புரையில் ஈடுபட்டார்.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு,

இன்னும் 15 ஆண்டுகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே தொடரும். அந்த ஆட்சியில் பங்காளிக் கட்சியாக இருந்து மக்களுக்கான சேவைகளை நாம் முன்னெடுப்போம்.

அம்பாறை மாவட்ட தமிழ்மகளின் இருப்பைப் பாதுகாத்து பொருளாதாரத்தை வளமாக்குவதே எனது இலட்சியம் என நினைத்துத்தான் அம்பாறைக்கு வந்துள்ளேன். ஆனால் எனது வருகை இங்குள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வயிற்றில் புளிகரைக்கிறது. கூடவே தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும் பயம் வந்துவிட்டது.

கடந்த நான்கரை வருட காலம் எமது மக்களை இவர்கள் சீரழித்துவிட்டார்கள். மர வியாபாரம் மண் வியாபாரம் இதுதான் அவர்கள் செய்த சேவைகள் - சாதனைகள். வாக்களித்த மக்களை நடுத்தெருவில் விட்டுவிட்டு இன்று மீண்டும் வாக்கு கேட்டு வருகிறார்கள். எனவே எமது சின்னம் கப்பல். அது வெறும் கப்பல் அல்ல. தத்தளிக்க மக்களை காப்பாற்றி கரை சேர்க்கும் கப்பல். எனவே தத்தளிக்கின்ற அம்பாறை தமிழ் மக்களை காப்பாற்றி கரைசேர்க்கின்ற அக்கப்பலுக்கு வாக்களித்து வாழ்வை வளப்படுத்துவதோடு இருப்பையும் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் - என்றார்.



# நாவற்குடாவில் கூட்டமைப்பின் பரப்புரை பணியகம் திறப்பு

மட்டக்களப்பு, ஜூலை 08

மட்டக்களப்பு நாவற்குடாவில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் ஞானப்பிரகாசத்தின் தேர்தல் பரப்புரைக்கான அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும், பொறியியலாளருமான முருகேசபிள்ளை ஞானப்பிரகாசத்தின் தேர்தல் பிரசாரத்துக்கான பிரதான அலுவலகம் நாவற்குடாவில் நேற்றுமுன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களான கி. துரைராஜசிங்கம், மா.உதயகுமார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம், ஜனநாயக போராளிகள் கட்சியின் உபதலைவர் ந. நகுலேஸ், கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் ப. கோணேஸ், மாநகரசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர்கள், பொதுமக்கள், பெண்கள், அமைப்பினர்கள் கலந்துகொண்டார்கள்.

இதன்போது மாவட்டத்தில் நான்கு பிரநிதிகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் வெற்றிபெறுவதற்கு தமிழ் மக்கள் அனைவரும் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்றும், வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிப்பது தார்மீக கடமையாகும் எனவும் வேட்பாளர் மு.ஞானப்பிரகாசம் இதன்போது குறிப்பிட்டார்.



# அம்பாறையில் சூடுபிடித்தது பாராளுமன்ற தேர்தல் பரப்புரை

அம்பாறை, ஜூலை 08

எதிர்வரும் ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள் பலரும் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் வீட்டுக்கு வீடு தேர்தல் பரப்புரையில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

தேசிய காங்கிரஸ் சார்பில் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் ஏ.எல்.எம். சலீம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் ரிஸ்லி முஸ்தபா போன்றவர்கள் வீட்டுக்கு வீடு தேர்தல் பிரசார பணியை அண்மை நாட்களாக ஏட்டிக்குப் போட்டியாக முன்னெடுத்தனர்.

அத்துடன் தேசிய காங்கிரஸ் சார்பான திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர்களான நிசாத் ஷரிப், சட்டத்தரணி ஏ.எல்.எம். நிபாஸ், சட்டத்தரணி கே.எல். சமீம், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர்களான ஏ.எல். எம்.நஸீர், எம்.சி. பைசல் காசிம், ஏ.எல்.எம். தவம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளர் முஷாரப், கே.எம். ஜவாத், போன்றோர்களும் வீட்டுக்கு வீடு தேர்தல் பிரசார பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

சகல அரசியல் கட்சிகளும் மகளிர் கருத்தரங்கு, இளைஞர் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், அரசியல் செயற்பட்டு கிளை அலுவலக திறப்புக்கள் என மும்முரமாக அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வரும் சூழ்நிலையில் உட்கட்சி போட்டிகள், விருப்புவாக்கு சண்டைகள் எதிரணியுடனான முரண்பாடுகள் தேர்தல் வன்முறைகள், சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளும் ஆங்காங்கே பரவலாக இடம்பெறுகின்றன.

# சுகாதார விதிகளை மதிக்காத 32 தேர்தல் அதிகாரிகளுக்கு தடை

மட்டக்களப்பு, ஜூலை 08

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் சுகாதார விதிகளை கடைப்பிடிப்பது மிகக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த விதிகள் தொடர்பில் சிரத்தை கொள்ளாத 32 தலைமை தாங்கும் அதிகாரிகள் அடுத்த 5 ஆண்டுகள் தேர்தல் பணியில் ஈடுபட முடியாதவாறு தடை விதிக்கப் பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பில் நடந்த தேர்தல் ஆணையத்தின் விசேட கூட்டத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இங்கு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.சசீலன், கருத்து வெளியிடுகையில் கடந்ததேர்தலில் வாக்கெடுப்பு நிலைய கடமையில் கவனயீனமாக நடந்த 32 தலைமை தாங்கும் தேர்தல் கடமை உத்தியோகத்தர்கள் ஐந்து வருடங்களுக்கு தேர்தல் கடமையில் இணைத்துக் கொள்ளாதவாறு தேர்தல் கடமை தடை செய்யப்பட்டிருப்பதாகவும் இத்தேர்தலிலும் இந்த தவறுக்கு இடமளிக்கப்படக்கூடாதெனவும் அறிவிப்பு செய்தார்.

மேலும், மாற்று திறனாளிகள் வாக்களிக்க போக்குவரத்து வசதி செய்ய முன் கூட்டியே மருத்துவ அத்தாட்சிப்பத்திரம் சமர்பிக்குமாறு பிரதேச மட்ட தேர்தல் ஏற்பாடு உத்தியோகத்தர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். தேர்தலுக்கு மறுநாள் ஆறாம் திகதி இரவு மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் முடிவுகளை வெளியிட எதிர்பார்க்கப்படுவதாகவும் அன்றையதினம் காலை எட்டு மணிக்கே வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்படும். விருப்பு வாக்குகள் எண்ணும் பணிகள் மறுநாள் ஏழாம் திகதியே நடைபெறும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பிரதான வாக்கெண்ணும் உத்தியோகத்தர்களின் கடமைக்கு தட்டுப்பாடு நிலவுவதால் பிரிவுக்கான கடமைகளுக்கு மேலதிகமாக இம்முறை அக்கடமைகளை செய்ய பிரதேச செயலாளர்களும் பொறுப்பேற்றுள்ளனர். சுகாதார வழிமுறைகளுக்கமைய தேர்தலை நடாத்தும் விசேட வழிகாட்டல்கள் அடங்கிய அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.




செய்திகள்

# மக்கள் கூடுமிடங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு!

## புலனாய்வுப் பிரிவு ஆலோசனை

கொழும்பு, ஜூலை 08

புலனாய்வுப் பிரிவுகளின் ஆலோசனைக்கு அமைய, தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள், பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தேவாலயங்களிலும், பொது மக்கள் அதிகளவில் கூடுகின்ற கண்டி, கதிர்காமம் போன்ற இடங்களிலும், ஏனைய வழிபாட்டுத் தலங்களிலும் பாதுகாப்பு தொடர்ந்து தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

புலனாய்வுப் பிரிவுகளின் ஆலோசனைப்படியே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, சிறப்புப் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, நாடு முழுவதும் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களும் எச்சரிக்கப்பட்டுள்தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஏதேனும் தேவாலயம் அல்லது ஏனைய வழிபாட்டுத் தலங்கள் கூடுதல் பாதுகாப்பு கோரினால், அதனை வழங்குமாறும், பொலிஸ் நிலையங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாகத் தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் பெருமளவு பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக ஞாயிறு ஆராதனைகளின்போது அதிகளவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள பொலிஸ் பேச்சாளர், இது ஒரு விசேட நடவடிக்கை அல்ல என்று தெரிவித்துள்ளபோதும், புலனாய்வுப் பிரிவுகளால் விடுக்கப்பட்ட ஆலோசனையின் பேரிலேயே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் தொடர்ந்து பொலிஸார் விழிப்பு நிலையிலேயே இருப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

# இயக்கச்சி குண்டுவெடிப்பு

# சிவில் பாதுகாப்பு அலுவலர் கைது!

கிளிநொச்சி, ஜூலை 08

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பளை வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொருவர் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 3ஆம் திகதி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அந்த வெடிப்பு சம்பவத்தை அடுத்து வெடிப்பு இடம்பெற்ற அவரது வீட்டில் பொலிஸார் மற்றும் படையினரினால் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அங்கிருந்து பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்ட குண்டு 2, கரும்புலி நாள் போஸ்ரர் 1, போன் 1, லப்ரொப் 1, டொங்கிள் 1, பென்ரைவ் 1, சிடி 1 ஆகியன மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவரின் மனைவியான பெண் ஆசிரியை ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் சட்ட ரீதியாகத் திருமணமாகாது குறித்த நபருடன் வாழ்ந்து வந்திருந்தார்.

குற்ற செயல் ஒன்றுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் தடய பொருட்களை அழிக்க முற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ஆசிரியை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் தொடர் விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் கமலகரன் என்ற 40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சி சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் கிராம அலுவலரூடாக விண்ணப்பிக்கலாம்

## உதவித் தேர்தல் ஆணையாளர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 08

தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் தமக்குரிய தேசிய அடையாள அட்டை விண்ணப்பத்தினை கிராம சேவையாளரூடாக உடனடியாக விண்ணப்பிக்குமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் விதிமுறைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டத்தின் பின் கருத்து தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலில் 2019 ஆம் ஆண்டுக்குரிய தேர்தல் இடாப்பு பயன்படுத்தப்பட உள்ளது. 2019 தேர்தல் டாப்பில் பெயர் உள்ளவர்கள் இந்த முறை தேர்தலில் வாக்களிப்பதற்கு உரிமை உள்ளவர்கள் அதேபோல் தேர்தலில் வாக்களிப்பதற்குச் சமூகமளிக்கும் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அடையாளத்தைச் சமர்ப்பித்து தனது வாக்களிப்பை மேற்கொள்ள முடியும்.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அடையாளமாக அடையாள அட்டை, வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச்சீட்டு மற்றும் ஆட்பதிவுத் திணைக் களத்தினால் மதகுருமாருக்கு என வழங்கப்பட்ட அடையாள அட்டை, சமூக சேவைத் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற முதியோர் அடையாள அட்டை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்தகைய எந்த ஒரு ஆவணமுமில்லாத ஒருவர் தற்காலிகமாக தேர்தல் திணைக்களத்தினால் அடையாள அட்டையைப் பயன்படுத்தி வாக்களிக்க முடியும்.

ஜூலை மாதம் 17ஆம் திகதி வரைக்கும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் தரவுத்தளத்திலுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக உட்சேர்க்கப்பட்ட சகல தேசிய அடையாள அட்டை விண்ணப்பதாரர்களுக்கும் அடையாள அட்டையைத் தேர்தலுக்கு முன்னர் விநியோகிப்பதற்குரிய விசேட நடவடிக்கையை ஆட்பதிவுத் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

அதேபோல 2020 ஜூலை மாதம் 29ஆம் தேதி வரைக்கும் ஆட்பதிவுத் திணைக்கள தரவுத்தளத்தில் உட் சேர்க்கப்படுகின்ற தகவல்களைக் கொண்டு உறுதிப்படுத்திய கடிதத்தைத் தேர்தலுக்கு முன்னர் விநியோகிப்பதற்கும் ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே தேசிய அடையாள அட்டை இல்லாத அனைத்து வாக்காளர்களும் எதிர்வரும் ஜூன் 29ஆம் தேதிக்கு முன்னர் தங்களுக்குரிய அடையாள அட்டைக்குரிய விண்ணப்பத்தினை ஆட் பதிவுத் திணைக்களத்திற்கு விண்ணப்பித்து தங்களுக்குரிய ஆள் அடையாள அட்டையினை பெற்றுக் கொள்ள முடியும். இது தொடர்பில் சகல கிராம சேவையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம் இலகுவாக வாக்காளர்கள் வாக்களிப்பினை மேற்கொள்ள நாம் முயற் சிக்கின் றோம்- என்றார்.

# இலங்கை கடல் எல்லைகளில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள்

கொழும்பு, ஜூலை 08

வெளிநாடுகளில் இருந்து கடல் மார்க்கமாக நாட்டுக்குள் வரும் நபர்களைக் கைது செய்தல் மற்றும் கடல் எல்லைகளைப் பாதுகாத்தல் தொடர்பிலான விசெட வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

விசேடமாக இந்தியாவில் இருந்து கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் கடல் மார்க்கமாக வடக்குப் பிரதேசங்களுக்கு வரும் அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தக் கடற்படையினர் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததுடன் அதனை தொடர்ந்தும் அதிகரிப்பதாகக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# வெலிக்கடை சிறையில் கைதிக்கு கொரோனா!

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவர் கொரோனா (கொவிட் 19) தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கைதி போதைப் பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையமான கந்தாகாடு நிலையத்தில் இருந்து கடந்த 27 ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கைதியுடன் தொடர்பில் இருந்தவர்கள் பி.சீ.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் குறித்த பரிசோதனைகளுக்கு கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளும் உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# நிலநடுக்கத்தால் அதிர்ந்தன தெற்கு, தென்கிழக்காசியா

## நேற்று மட்டும் 4 நாடுகளில் நிலஅதிர்வு



சிங்கப்பூர், ஜூலை 08

சிங்கப்பூரில் நேற்று அதிகாலை 4.24 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவான இந்த நிலநடுக்கம் சிங்கப்பூர் நகரின் தென்கிழக்கே 1,102 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேபோல், இந்தோனேசியாவிலும் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் சிமராங் பகுதியில் இருந்து வடக்கே 142 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோளில் 6.3 ஆக பதிவானது. இதனால் வீடுகள் குலுங்கின.

இந்த நிலநடுக்கம் சக்திவாய்ந்ததாக இருந்தாலும் சுனாமி எச்சரிக்கை ஏதும் வெளியிடப்படவில்லை. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்கின்றனர்.

சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை ஏற்படுத்தக்கூடிய 450 எரிமலைகள் கொண்ட பசிபிக் நெருப்பு வளைய பகுதியில் இந்தோனேசியா உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தியா, ஆப்கானிஸ்தானிலும் நேற்று சிறியளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

# நேருக்கு நேர் மோதி விமானங்கள் விபத்து

வாஷிங்டன், ஜூலை 08

அமெரிக்காவில் இரண்டு சிறிய ரக விமானங்கள் நடு வானில் நேருக்கு நேர் மோதி ஏரியில் விழுந்து விபத்துக்குளான சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

அமெரிகாவின் இடஹோ மாகாணம் ஸ்கூட்னை நகரில் மிகப்பெரிய ஏரி அமைந்துள்ளது. இங்கு, சிறிய ரக விமானங்கள் அதிகளவில் பயணங்களை மேற்கொண்டு வந்தன.

இந்நிலையில், அந்த ஏரி பகுதியின் வான் பரப்பில் நேற்று பறந்து கொண்டிருந்த இரண்டு சிறிய ரக விமானங்கள் சுமார் 900 அடி உயரத்தில் நடுவானில் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

விமானங்கள் வானில் நேருக்கு நேர் மோதியதையடுத்து அவை ஏரிக்குள் விழுந்தன. மீட்புப் படையினர் விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஆனால் இந்த விபத்தில் இரண்டு விமானங்களிலும் இருந்த அனைவரும் உயிரிழந்து விட்டனர்.



# 4 மாத குழந்தை தானாகவே கோடீஸ்வரரான அதிசயம்

நைகர், ஜூலை 08

நைஜீரியாவில் பிறந்து நான்கு மாதங்களே ஆன குழந்தை தானாகவே பெரும் கோடீஸ்வரர் ஆகியுள்ளது என்று அவரின் தாய் தெரிவித்துள்ளார்.

நைஜீரியாவில், லவுராய் கிஜி என்ற பெண் எழுத்தாளர், தொழிலதிபர், சமூக ஊடக நிபுணர் என பன்முகத்தன்மை கொண்ட கோடீஸ்வரர் ஆவார். இவருக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் லவுரல் என்ற மகள் பிறந்தார்.

இந்நிலையில் லவுரல் தானாகவே தனது திறமையை கொண்டு கோடீஸ்வரர் ஆகிவிட்டார் என்ற ஆச்சரிய தகவலை அவரின் தாய் லவுராய்கிஜி வெளியிட்டுள்ளார். அதாவது இன்ஸ்ட்ராகிராம் மூலமே குழந்தை கோடீஸ்வரர் ஆகியுள்ளார்.

இது குறித்து லவுராய்கிஜி தனது பதிவில், இன்ஸ்ட்ராகிராமில் அதற்குள் மிக பிரபலமாகி என் மகள் கோடீஸ்வரர் ஆகி தூதர் ஒப்பந்தத்தை பெற்றுள்ளார். என்னையே அதற்குள் அவர் முந்தி விடுவார் போல் இருக்கிறது, இந்த வயதிலேயே பெரிய வேலை தான் என பதிவிட்டுள்ளார்.

அதாவது லவுரா இன்ஸ்ட்ராகிராமில் மிக பிரபலமானவர், அவரின் மகள் புகைப்படங்களை வைத்து செய்யப்படும் விளம்பரங்களும் அதிகளவில் பகிரப்படும் நிலையிலேயே இந்த அதிர்ஷ்டம் அவருக்கு அடித்துள்ளது.

# நான்கு மாதங்களின் பின்னர் கிரிக்கெட் போட்டி இன்று

## இங்கிலாந்து மண்ணில் சாதிக்குமா மேற்கிந்தியா



லண்டன், ஜூலை 08

கொரோனா தொற்றால் தடைப்பட்ட கிரிக்கெட் போட்டி 4 மாதங்களின் பின்னர் இன்று தொடங்குகிறது. இதில் இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் டெஸ்ட் போட்டியில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

ரசிகர்கள் இன்றி, சுகாதார வழிகாட்டல்களுடன் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியை உலகமே உற்று நோக்க இருக்கிறது.

பலம் பொருந்திய அணியாக திகழ்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 1995 ஆம் ஆண்டுக்குப் பின் பலவீனம் ஆனது. அதன்பிறகு அணியை எப்படி கட்டமைக்க முயற்சி செய்தாலும் முந்தைய காலம் போன்று ஜொலிக்க முடியவில்லை.

மேற்கிந்தியத் தீவுகள் அணி கடைசியாக இங்கிலாந்து மண்ணில் 1988 ஆம் ஆண்டு டெஸ்ட் தொடரை கைப்பற்றியிருந்தது. அதன்பின் 32 ஆண்டுகளாக தொடரை கைப்பற்றவில்லை.

இந்த தொடரை வெல்ல ஜாம்பவான் பிரையன் லாரா மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அறிவுரை வழங்கியுள்ளார். இந்தத் தொடர் குறித்து லாரா கூறுகையில் “மேற்கிந்தியத் தீவுகள் அணி மிக விரைவாக நல்ல நிலைக்கு திரும்ப வேண்டும். இங்கிலாந்து அணியை அதன் சொந்த மைதானத்தில் வீழ்த்துவது எளிதான காரியமல்ல. எப்போதுமே அவர்களுக்கு சாதகமாக இருக்கும்.

போட்டியை ஐந்து நாட்கள் வரை கொண்டு செல்வார்கள் என்று நினைக்கவில்லை. நான்கு நாட்களில் முடிக்கவே விரும்புவார்கள். அவர்கள் முன்னிலை பெற்று அதை தக்கவைத்துக் கொள்வார்கள். இந்தத் தொடரை உலகமே பார்க்க ஆவலாக உள்ளது. இது போட்டித் தொடராக இருக்கும் என்று ஒவ்வொருவரும் நம்புகிறோம்.

இந்தத் தொடரை வென்றால், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஏராளமான அர்த்தத்தை ஏற்படுத்தும். தொடரின் முதல் நாளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால், இங்கிலாந்துக்கு எதிராக சிறப்பாக விளையாட முடியும் என்று காண்பித்தால், அது முக்கிய விடயமாக இருக்கும்” என்றார்.

# ஹொங்கொங்கின் கோரிக்கையை நிராகரித்தது பேஸ்புக் நிறுவனம்

ஹொங்கொங், ஜூலை 08

பயனர்கள் குறித்த தகவல்களை அளிக்குமாறு ஹொங்கொங் அரசு விடுத்த கோரிக்கையை நிறுத்தி வைத்துள்ளதாக பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுமார் 75 இலட்சம் மக்கள் வசிக்கும் ஹொங்கொங்கில், உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, சீன அரசு கடந்த வாரம் தேசிய பாதுகாப்பு சட்டத்தை அமுல்படுத்தியது. இதனை எதிர்த்து, ஹொங்கொங்கில் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், பேஸ்புக் மற்றும் வட்ஸ் அப் பயனர்கள் குறித்த தகவல்களை அளிக்குமாறு ஹொங்கொங் அரசு பேஸ்புக் நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்தது.

இது தொடர்பில் அந்த நிறுவனம் விடுத்த அறிக்கையில்,

“ஹொங்கொங்கில் சீனா அமுல்படுத்திய புதிய பாதுகாப்பு சட்டம் குறித்த மதிப்பீடு நிலுவையில் இருக்கிறது. முறையாக மனித உரிமைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பது குறித்து மனித உரிமை நிபுணர்களுடன் ஆலோசனை நடைபெற்று வருகிறது. கருத்து சுதந்திரம் ஓர் அடிப்படை மனித உரிமை என்று நாங்கள் நம்புகிறோம். மேலும் அவர்களின் பாதுகாப்பு அல்லது பிற விளைவுகளுக்கு பயமின்றி தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் உரிமையை ஆதரிக்கிறோம்” இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பேஸ்புக் நிறுவனத்தின் நடவடிக்கைக்கு டிஜிட்டல் உரிமைகள் குழுவான ப்ரோ பிரைவசி (Proprivacy) ஆதரவு தெரிவித்துள்ளது.




# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : காலைக்கதிரொளி
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பெண் பூவே

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
சிவகார்த்திகேயன் மற்றும் கீர்த்திசுரேஷ் நடிப்பில் றெமோ
கார்த்தி, ஜோதிகா மற்றும் பலர் நடிப்பில் தம்பி



திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : இப்படியும் பாடலாம்
5.00 மணி : அந்த நாலு பேர்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : கதை நேரம்



**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : யாவரும் கேளீர்




## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
விவேக் பாபு நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) அரசியல் விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.07.2020 அன்று வெளியிடப்பட்டது.